ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1876/ 2 - 2014 අගෝස්තු මස 18 වැනි සඳුදා - 2014.08.18

*1876/2 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ், வத்தளை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*அனுமதிபெறாது மூன்றுமாத காலமொன்றுக்கு சபையின் கூட்டங்களுக்கு சமுகமளியாமை காரணமாக வத்தளை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும் ;*

*என்டனி குரே என்னும் பதவி வகித்த உறுப்பினர் அங்கத்துவம் வகித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் வத்தளை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர்குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. போரகே தொன் பீலிக்ஸ் பாலித் திஸ்ஸ மொஹான் பண்டார என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*இப்போது வத்தளை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பதிராஜ ஆரச்சில்லாகே சுனில் சேனாரத்ன ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. போரகே தொன் பீலிக்ஸ் பாலித் திஸ்ஸ மொஹான் பண்டார என்பவர் வத்தளை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

பீ. ஏ. எஸ். சேனாரத்ன,
தெரிவத்தாட்சி அலுவலர்,
வத்தளை பிரதேச சபை.

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*கம்பஹா,*
*2014, ஓகத்து 15.*

*9- 09*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*